<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>
<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>

**<u>MCOP No. 114/2020</u>** 07.08.2025 **ம.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ஜெயலட்சுமி | தொழில் |
| க/பெ | | கிராமம் |
| வயது | | தாலுகா |
| ஜாதி | | மாவட்டம் |
| சமயம் | | |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு</u>**
**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. விபத்து சமயத்தில் ராமமூர்த்தி ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தில் என்னுடைய கணவரும் இன்னொருவரும் பின்னால் அமர்ந்து பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விபத்தின் போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் சென்ற மேற்படி இருசக்கர வாகனத்தின் ஓட்டுனரான ராமமூர்த்தி அதிவேகமாக சாலையின் நடுப்பகுதிக்கு வந்து எதிரில் வந்த லாரியின் வலது பின்பக்கம் மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரர் காரணம் அல்ல என்றாலும் அவர் மேற்படி லாரியை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சரியான திசையில் ஓட்டி வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

2. விபத்து சாலையின் மேற்கு பகுதியில் நடந்ததாகத்தான் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அது எங்களுக்கு பாதகமாக அமையும் என்பதால் தான் அதை நான் நீதிமன்றத்தின் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்து தொடர்பாக குற்ற வழக்கு பதிவு செய்த போலீசார் விசாரணைக்கு பிறகு விபத்து ராமமூர்த்தி என்பவருக்கு

அஜாக்கிரதையாக தான் நடந்தது என வழக்கு தாக்கல் செய்து முழு விசாரணைக்கு பிறகு அவர் இறந்த பிறகு மேற்படி வழக்கு அற்று போய்விட்டதாக உத்தரவிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அறிக்கை என்னுடைய வழக்குக்கு எதிராக இருப்பதால்தான் அது நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் லாரியின் முன்புறம் சேதம் எதுவும் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. இந்த விபத்திற்கு சட்டத்திற்கு புறம்பாக இருசக்கர வாகனத்தில் பின்புறம் அமர்ந்து பயணம் செய்த என்னுடைய கணவர் மற்றும் இன்னொருவரின் கவனக்குறைவு தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு இருசக்கர வாகன ஓட்டுனரான ராமமூர்த்தி என்பதுதான் காரணம் என்பதால் எனக்கு 4–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம்தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 1–ம் விபத்து தேதியில் கனரக வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதால் பாலிசி விதிமுறைகள் ஏற்பட்டுள்ள காரணத்தினால் மூன்றாம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

4. என்னுடைய கணவருக்கு ஒப்பந்த தொழில் மற்றும் விவசாயத்தில் இருந்து வருமானம் வந்தது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவரது வருமான வரி ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறக்கு'போது என்னுடைய கணவரின் வயது 44 என்று குறைவாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 3–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**4–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

5. என்னுடைய மனுவிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் விபத்து 1–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் நடைபெற்றதாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். TN 78 E 1035 என்ற வாகனம்

என்னுடைய கணவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தை ராமமூர்த்தி என்பவர் ஓட்ட அதன் பிறகு திருமூர்த்தி என்பவரும் அவருக்குப் பின்னால் என்னுடைய கணவரும் மேற்படி இருசக்கர வாகனத்தில் அமர்ந்து பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். திருமூர்த்தி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய கணவர் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை இயக்கவில்லை என்றால் சரிதான்.

6. ராமமூர்த்தி மற்றும் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தவர்கள் விபத்தின் போது குடிபோதையில் இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் இறந்துபோன கதிர்வேல் என்பவர் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் என்ற முறையில் நான்காம் எதிர்மனுதாரருக்கு எதிராக இழப்பீடு கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான்காம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கணவரின் வயது மற்றும் தொழில் வருமானம் ஆகியவற்றை வழக்குக்காக மிகைப்படுத்தி கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.08.07 18:50:44 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.